# தமிழ் - மேல் நிலைக்கல்வி (304)

## (அக மதிப்பீடு) **Tutor Marked Assignment (2025-26)**

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) களவு போன கனவு சிறுகதையின் கதை முடிச்சு யாது? (பாடம் 26)
   (ஆ) விளம்பரத்தின் என்ற சொல்லின் விளக்கம் யாது? (பாடம் 30)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) இணையம் என்பது என்ன? (பாடம் 32)
   (ஆ) ஆளில்லா மின்நூலகம் எந்த நேரத்தில் செயல்படும்? (பாடம் 33)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) மின்னஞ்சல் என்றால் என்ன? (பாடம் 34)
   (ஆ) முகவர்களின் தகுதிகள் என்ன? (பாடம் 36)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி செய்த பெண் முன்னேற்றப் பணிகள் குறித்து விவரிக்க. (பாடம் 19)
   (ஆ) நீர் மாசுபடுதல் குறித்து கட்டுரை வரைக. (பாடம் 20)

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) நிகழ்வுக் குறிப்பு எழுதும் முன்பு கவனிக்க வேண்டியவை என்ன? (பாடம் 41)
   (ஆ) கீழ்கண்ட பகுதியை படித்து மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக. (பாடம் 17)

**Unnati Educations**

**9899436384, 9654279279**

மனித நேயம் மிக்கவர்

மஞ்சக் குப்பம் என்ற ஊரில் வட்டாட்சியராக வேலைப் பார்த்தவர் வேங்கட சுப்பையர். அவர் வெளியே வந்து கொண்டிருக்கும் போது ஒருவர் கொம்பை ஊதிக் கொண்டு அவர் வருவதைத் தெரிவித்து வண்டியின் முன் ஓடி வரவேண்டும். இதனைக் கண்ட இராமலிங்கர் மனம் வருந்தினார். வட்டாச்சியர் இந்த வழக்கத்தை நிறுத்தி விட்டார். இது இராமலிங்கத்தின் மனித நேயச் செயலைக் காட்டுகின்றது.

தரும சாலை அமைத்தல்

இராமலிங்கர் மக்கள் அனைவரும் பசி இல்லாமல் மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என விரும்பினார். அதற்காக ஓர் அறச்சாலையை அமைக்க வேண்டும என எண்ணினார். இது பற்றித்தம் அன்பர்களுடன் கலந்துரையாடினார். அதற்கு ஏற்ற இடமாக வடலூரைத் தேர்ந்தெடுத்தார். அங்கு தருமச்சாலை கட்டி முடிக்கப்பட்டது. 23.03.1867 இல் தருமச்சாலை தொடங்கப்பட்டது. அன்று முதல் இயன்ற வரை பசி என்று வந்தோர் அனைவருக்கும் எந்த வேறுபாடும் பார்க்காமல் உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

உயிர் இரக்கம்

வேட்டவலம் என்ற ஊரில் ஒரு சமீன்தார் வாழ்ந்தார். அவர் பெயர் அப்பாசாமி பண்டரியார். அவர் பிற உயிரினங்களை வேட்டையாடி மகிழ்பவர். அவருக்கு இரு மனைவியர் ஒரு மனைவிக்குப் பேய் பிடித்திருந்தது. மற்றொரு மனைவிக்கு மகோதரம் என்ற நோய். சமீன்தார் எவ்வளவு முயன்றும் மனைவியர் குணம் ஆகவில்லை. ஒரு நாள் இராமலிங்கத்திடம் தன் குறைகளைக் கூறி முறையிட்டார், இராமலிங்கர் அவர் வீட்டுக்குச் சென்றார். இராமலிங்கர் வீட்டு வாசலில் வரும் போது முதல் மனைவிக்குப் பிடித்திருந்த பேய் ஓடி விட்டது. இரண்டாம் மனைவிக்குத் திருநீர் கொடுத்தார். அவளுடைய நோய் நீங்கி விட்டது. இதைக் கண்ட சமீன்தார் மிக்க மகிழ்ச்சியுற்றார். சமீன்தார் அன்று முதல் வேட்டையாடுவதை விட்டு விட்டார். இது இராமலிங்கரின் உயிர் இரக்கச் சிந்தனையைக் காட்டுகிறது.

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6
   (அ) வேலை வேண்டி விண்ணப்பம் ஒன்றை தயார் செய்க. (பாடம் 15)
   (ஆ) பின்வரும் கதையினைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. (பாடம் 26)

**Unnati Educations**
**9899436384, 9654279279**

களவு போன கனவு

ஆண்டாளின் காய்கறி கடைக்கு இன்று விடுமுறை, கடைத் தொடங்கிய காலத்திலிருந்து 'பந்துக்கு' மட்டுமே கடை மூடிய ஆண்டாள் வாடிக்கையாளர்கள் நிற்பதையும் பார்க்காமல் கடையைச் சாத்தி விட்டாள்.

லுங்கியோடு திரியும் சோமு வேட்டி சட்டை அணிந்திருந்தார். பெரிய கொண்டையிட்டு முகத்தில் கால்வாசிக்கு குங்கமம் வைத்து புதுச்சேலையோடு ஆண்டாள் காட்சி தந்தாள். முதலியார் ஜவளிக்கடை துணிப்பையோடு பூப்போட்ட பாவாடை தாவணியில் ரேணுகா. சிறகு விரிக்க ஆரம்பிக்கும் குஞ்சுப் பறவைக்கு வழிகாட்டும் தாய்ப்பறவை மாதிரி மகளை நடுவிலே விட்டு சோமுவும் ஆண்டாளும் தெருவிலே நடந்து செல்வதைப் பேட்டையே வேடிக்கைப் பார்த்தது.

நேற்று மதியத்திலிருந்தே லாட்டரிச் சீட்டில் பரிசு விழுந்தது போல ஆண்டாளுக்குள் குதூகலம். கனவு கைகூடும் போது சந்தோஷப்படுவது மனித இயற்கைதானே?

எஸ். எஸ். எல்.சி. தேர்வு முடிவு செய்தித்தாளில் வெளி வந்திருந்தது. ரேணுகா பாஸாகியிருந்தாள். நேற்று வாங்கின தக்காளி அழுகிப் போயிருந்துச்சு. கத்தரிக்கா சொத்தை... வெண்டைக்கா முத்தல், கேரட் அரை கிலோ வாங்கினா ரெண்டு நாளைக்கு வரலியே... எடைய பாத்துக்போடுங்க...

எல்லா குற்றச்சாட்டுகளையும் சிரிப்போடு சமாளிக்க வேண்டும். கொஞ்சம் முகம் சுழித்தால் அடுத்த நாள் வர மாட்டார்கள்.

மழைக்காலத்தில் உப்பு விற்கிற மாதிரி தான் காய்கறி வியாபாரமும் நேற்று ஒரு விலை. இன்று ஒரு விலை போட்டிப் போட்டுக் கொண்டு கத்தோ கத்தென்று கத்தி ஆள் பிடித்து அள்ளித் திணிக்க வேண்டும்.

ஆண்டாள் கடையில் எப்போதும் கூட்டமிருக்கும். அவள் பேச்சுதான் பலம். காய்கறிகளைப் பற்றியும் மனிதர்களைப் பற்றியும் பேசுவதில் கெட்டிக்காரி. வீட்டிலும் அலுவலகத்திலும் புழுக்கத்திலும் தொல்லையிலுமாக களைத்துப்போய் வருகிறவர்களுக்கு இவள் பேச்சு. சிரிப்பு அவசியம். ஆண்டாளுக்கு இவைகள் தாராளம்.

சோமு காய்கறி வாங்கி கடையில் கொட்டி, சாராயம் குடித்து பேட்டை வஸ்தாவாக வலம் வருவதோடு சரி. இருபது வருஷ வாழ்க்கைப் போராட்டத்தில் ஆண்டாள் சோமுவிடம் தோல்வியுற்றாலும் காலத்தை வெல்ல சபதமேற்றாள்...

(அ) ஆண்டாளின் தோற்றம் குறித்து எழுதுக.
(ஆ) ஆண்டாளின் குதூகலத்தின் காரணம் என்ன?
(இ) காய்கறி வியாபாரம் குறித்து எழுதுக.

----------------

Unnati Educations
9899436384, 9654279279